இந்திய அரசு

சட்ட, நீதி மற்றும் நிறும அலுவல்கள் அமைச்சகம்

सत्यमेव जयते

# எண்ணெய் வயல்கள் (ஒழுங்குறுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) சட்டம், 1948

(சட்ட எண் 53/1948)

(2002, செப்டம்பர் 30 அன்று இருந்தவாறு)

# THE OILFIELDS (REGULATION AND DEVELOPMENT) ACT, 1948

(Act No. 53 of 1948)

(As on the 30th September, 2002)

தமிழாக்கம்:

இந்திய அரசுக்காக

சட்ட (ஆட்சிமொழிப் பிரிவு)த் துறை

தலைமைச்செயலகம்

சென்னை-9

தமிழ்நாடு அரசு எழுதுபொருள் அச்சுத் துறை சிறப்பு ஆணையர்
மற்றும் ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது
2006

Price: Rs. 21.00

எண்ணெய் வயல்கள் (ஒழுங்குறுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) சட்டம், 1948

(சட்ட எண் 53/1948)

# THE OILFIELDS (REGULATION AND DEVELOPMENT) ACT, 1948

(Act No. 53 of 1948)

# PREFACE

This edition of the Oilfields (Regulation and Development) Act, 1948 (Act No.53 of 1948) as on the 30th September, 2002 containing the Authoritative Texts of that Act in Tamil and the same was published in the *Gazette of India*, Extraordinary, Part XV, Section 1, Vol. I, dated 10th February, 2004 on pages from 18 to 24.

The Authoritative Texts in Tamil was published under the authority of the President under clause (a) of section 2 of the Authoritative Texts (Central Laws) Act, 1973 (50 of 1973) and on such publication, it became the Authoritative Texts of that Act in Tamil.

New Delhi,
10th February, 2004.

(Signed)............................,
*Secretary to Government.*

# முன்னுரை

2002, செப்டம்பர் 30 ஆம் தேதியிலிருந்தவாறுள்ள எண்ணெய் வயல்கள் (ஒழுங்குறுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) சட்டம், 1948 (சட்ட எண் 53/1948) இன் இந்தப் பதிப்பு அச்சட்டத்தின் அதிகாரவுரிமைப்படியான தமிழ் வாசகத்தைக் கொண்டுள்ளது. இது, 2004, பிப்ரவரி 10ஆம் தேதியிட்ட இந்திய அரசிதழின் சிறப்பிதழ் பகுதி XV, பிரிவு 1, தொகுதி 1இன் 18 முதல் 24 வரையிலான பக்கங்களில் வெளியிடப்பட்டது.

இந்த அதிகாரவுரிமைப்படியான வாசகமாகிய தமிழ்மொழி பெயர்ப்பு, அதிகாரவுரிமைப்படியான வாசகங்கள் (மையச் சட்டங்கள்) சட்டம், 1973 இன் (50/1973) பிரிவு 2இன் கூறு (அ)வின்படி குடியரசுத்தலைவருக்குள்ள அதிகாரத்தின்படி வெளியிடப்பட்டது. அவ்வாறு வெளியிடப்பட்டதன் பேரில், இது தமிழில் அச்சட்டத்தின் அதிகாரவுரிமைப்படியான வாசகம் ஆயிற்று.

புதுதில்லி,
10 பிப்ரவரி, 2004.

(ஒப்பம்)................................,
இந்திய அரசாங்கச் செயலாளர்.

# எண்ணெய் வயல்கள் (ஒழுங்குறுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) சட்டம், 1948

(சட்ட எண் 53/1948)

பொருளடக்கம்


| பிரிவு | | பக்கம் |
|---|---|---|
| 1. | குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம் | 1 |
| 2. | [விட்டுவிடப்பட்டது] | 1 |
| 3. | பொருள்வரையறைகள் | 1 |
| 4. | சுரங்கக் குத்தகை எதுவும், இந்தச் சட்டத்திற்கு இணங்கியவாறு இருந்தாலன்றி செல்லுநிலையதாகாது. | 2 |
| 5. | சுரங்கக் குத்தகைகள் பொறுத்து விதிகளை வகுக்க அதிகாரம். | 2 |
| 6. | கனிம எண்ணெய்களின் மேம்பாடு பொறுத்து விதிகளை வகுக்க அதிகாரம். | 3 |
| 6அ. | கனிம எண்ணெய்கள் பொறுத்த உரிமைத் தொகைகள் | 4 |
| 7. | நிலவுறும் குத்தகைகளை மாற்றமைவு செய்வதற்கான விதிகளை வகுப்பதற்கு அதிகாரம். | 4 |
| 8. | ஒப்படைவு செய்தல் | 5 |
| 9. | தண்டனைகள் | 5 |
| 10. | விதிகளையும் அறிவிக்கைகளையும் முன்வைத்தல் | 5 |
| 11. | ஆய்வு செய்வதற்கு அதிகாரம் | 6 |
| 12. | தனியுறு நேர்வுகளில் விதிகளைத் தளர்த்துதல் | 6 |
| 13. | இந்தச் சட்டம் அரசாங்கத்தைக் கட்டுப்படுத்துவது ஆகும் | 6 |
| 14. | நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு | 6 |
| | இணைப்புப்பட்டியல் | |

# எண்ணெய் வயல்கள் (ஒழுங்குறுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) சட்டம், 1948

(சட்ட எண் 53/1948)[1]

[1948, செப்டம்பர் 8]

[2][***] எண்ணெய் வயல்களை ஒழுங்குறுத்துவதற்கும் [3][கனிம எண்ணெய் வள வாயில்களை] மேம்படுத்துவதற்கும் வகை செய்வதற்கான ஒரு சட்டம்.

[2][***] எண்ணெய் வயல்களை ஒழுங்குறுத்துவதற்கும், [3][கனிம எண்ணெய் வள வாயில்களை] [4][***] மேம்படுத்துவதற்கும் வகை செய்வது பொது நலனுக்கு உகந்ததாக இருப்பதால்;

ஈங்கிதனால் பின்வருமாறு சட்டமியற்றப்படுகிறது:—

குறுந்தலைப்பு, அளாவுகை மற்றும் தொடக்கம்.

1. (1) இந்தச் சட்டம், [5][எண்ணெய் வயல்கள்] (ஒழுங்குறுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) சட்டம், 1948 என்று வழங்கப்பெறும்.

[6][(2) இது, [7][***] இந்தியா முழுவதையும் அளாவி நிற்கும்.]

(3) இது, மைய அரசாங்கம் இதற்கென அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாகக் குறித்திடலாகும் தேதியன்று [8][செல்லாற்றல் பெறும்.]

2. [சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (ஒழுங்குறுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) சட்டம், 1957 (67/1957)இன் பிரிவு 32 மற்றும் இணைப்புப்பட்டியல் IIIஆல் (1-6-1958 முதல் செல்திறம் பெறுமாறு) விட்டுவிடப்பட்டது.]

பொருள் வரையறைகள்.

3. இந்தச் சட்டத்தில், பொருளுக்கு அல்லது தறுவாய்க்கு ஒவ்வாததாக எதுவும் இருந்தாலன்றி,—

(அ) "குத்தகை விடுபவர்" மற்றும் "குத்தகை எடுப்பவர்" என்னும் சொல்லமைப்புகள், முறையே, ஓர் உரிமம் வழங்குநரையும், உரிமம் பெறுநரையும் உள்ளடக்கும்;

(ஆ) "சுரங்கம்" என்பது, [3][கனிம எண்ணெய்களைக்] கண்டுபிடிக்கின்ற அல்லது பெறுகின்ற நோக்கத்திற்கான அகழ்வு எதுவும் என்று பொருள்படும்; மற்றும் ஓர் எண்ணெய்க் கிணற்றையும் உள்ளடக்கும்;

---

1. நோக்கங்கள் மற்றும் காரணங்களின் விவரவுரைக்காக, 1948, இந்திய அரசிதழின், பகுதி V— பக்கம் 601-ஐப் பார்க்கவும்.

2. சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (ஒழுங்குறுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) சட்டம், 1957 (67/1957) இன் பிரிவு 32 மற்றும் இணைப்புப்பட்டியல் IIIஆல் "சுரங்கங்கள் மற்றும்" என்னும் சொற்கள், பெருந்தலைப்பிலும், முகப்புரையிலும் (1-6-1958 முதல் செல்திறம் பெறுமாறு) விட்டுவிடப்பட்டன.

3. மேற்படிச் சட்டத்தினால் "கனிமங்கள்" என்பதற்கு மாற்றாக அமைக்கப்பட்டது.

4. மேற்படிச் சட்டத்தினால் "இதில் இதன் பின்பு குறித்துரைக்கப்பட்ட அளவுக்கு" என்ற சொற்கள் விட்டுவிடப்பட்டன.

5. மேற்படிச் சட்டத்தினால் "சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்" என்ற சொற்களுக்கு மாற்றாக அமைக்கப்பட்டது.

6. சட்டங்கள் இணக்க ஆணை, 1950ஆல் முன்பிருந்த உட்பிரிவுக்கு மாற்றாக அமைக்கப்பட்டது (26-1-1950).

7. சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (ஒழுங்குறுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) சட்டம், 1957, (67/1957) இன் பிரிவு 32 மற்றும் இணைப்புப்பட்டியல் IIIஆல் "ஜம்மு-காஷ்மீர் மாநிலம் நீங்கலாக" என்ற சொற்கள் (1-6-1958 முதல் செல்திறம் பெறுமாறு) விட்டுவிடப்பட்டன.

8. இந்தச் சட்டம், 25-10-1949 அன்று செல்லாற்றல் பெற்றது. 1949, இந்திய அரசிதழின் சிறப்பிதழ், பக்கம் 2075 இல் வெளியிடப்பட்ட 18-10-1949 தேதியிடப்பட்ட அறிவிக்கை எண் எம்-II-155-(24)-ஐப் பார்க்கவும்.

(இ) [1]["கனிம எண்ணெய்கள்"] என்பது, இயற்கை எரிவாயுவையும் கல்லெண்ணெயையும் உள்ளடக்கும்;

(ஈ) "சுரங்கக் குத்தகை" என்பது, [1][கனிம எண்ணெய்களைக் கண்டுபிடிக்கின்ற, சுரங்கம் உருவாக்குகிற, சுரங்கப் பணிபுரிகிற, எடுக்கச் செய்கிற, வாணிபத்திற்குரியதாக்குகிற, கொண்டு செல்கிற அல்லது விற்பனை செய்கிற நோக்கத்திற்காக அல்லது அதனுடன் தொடர்புடைய நோக்கங்களுக்காக வழங்கப்படும் ஒரு குத்தகை என்று பொருள்படும். மற்றும் நில ஆய்வுக்கான அல்லது கனிமவள ஆய்வுக்கான உரிமத்தையும் உள்ளடக்கும்;

(உ) "எண்ணெய் வயல்" என்பது, இயற்கை எரிவாயு, கல்லெண்ணெய், பக்குவப்படுத்தப்படாத எண்ணெய், தூய்மையாக்கப்பட்ட எண்ணெய், பகுதி தூய்மையாக்கப்பட்ட எண்ணெய் ஆகியவற்றையும் நீர்ம அல்லது திண்ம நிலையிலுள்ள கல்லெண்ணெய் விளைபொருள்களில் எதனையும் பெறுகின்ற நோக்கத்திற்கான செயல்முறை எதுவும், எந்தப் பரப்பிடத்தில் நடத்தப்பட்டிருக்கிறதோ அல்லது நடத்தப்பட்டு வருகிறதோ அந்தப் பரப்பிடம் எதுவும் என்று பொருள்படும்.

4. (1) இந்தச் சட்டத்தின் [2][தொடக்க நிலைக்குப் பின்பு], இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகளுக்கு இணங்கியவாறல்லாமல், பிறவாறாகச் சுரங்கக் குத்தகை எதுவும் வழங்கப்படுதல் ஆகாது.

(2) உட்பிரிவு (1) இன் வகையங்களுக்கு மாறாக வழங்கப்பட்ட சுரங்கக் குத்தகை எதுவும், இல்லாநிலையதாகி செல்திறம் இல்லாது போகும்.

*சுரங்கக் குத்தகை எதுவும், இந்தச் சட்டத்திற்கு இணங்கியவாறு இருந்தாலன்றி செல்லுநிலையதாகாது.*

5. (1) மைய அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, [1][கனிம எண்ணெய்] எதனையும் பொறுத்து அல்லது பரப்பிடம் எதிலும், சுரங்கக் குத்தகைகளை வழங்குவதை ஒழுங்குறுத்துவதற்காக அல்லது அத்தகைய குத்தகைகள் வழங்குவதைத் தடை செய்வதற்காக [3][விதிகளை வகுக்கலாம்.]

*சுரங்கக் குத்தகைகள் பொறுத்து விதிகளை வகுக்க அதிகாரம்.*

(2) குறிப்பாகவும், மேலே கண்ட அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றியும், அத்தகைய விதிகள் பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்காகவும் அல்லது அவற்றில் எதற்காகவும் வகை செய்யலாம்; அவையாவன:—

(அ) எந்தக் [1][கனிம எண்ணெய்கள்] அல்லது பரப்பிடங்கள் பொறுத்து, எந்த முறையில் எந்த நபர்களால் விண்ணப்பங்கள் செய்யப்படலாம் என்பது மற்றும் அத்தகைய விண்ணப்பங்கள் எவற்றின் மீதும் செலுத்தப்படவேண்டிய கட்டணங்கள்;

(ஆ) சுரங்கக் குத்தகைகள், எந்த அதிகார அமைப்பினால், எந்த வரையுரைகளின்மீது, எந்த வரைக்கட்டுகளுக்கு உட்பட்டு வழங்கப்படலாம் என்பது;

(இ) சுரங்கக் குத்தகை எதுவும் வழங்கப்படலாகும் மேல்வரை அல்லது கீழ்வரைப்பரப்பிடமும், கால அளவும், மற்றும் அடுத்துள்ள பரப்பிடங்கள் பொறுத்து எந்த வரையுரைகளின்மீது குத்தகைகள் ஒருங்கிணைக்கப்படலாம் என்பது;

---

[1] சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (ஒழுங்குறுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) சட்டம், 1957 (67/1957) இன் பிரிவு 32 மற்றும் இணைப்புப்பட்டியல் III ஆல் "கனிமங்கள்" என்னும் சொல்லுக்கு மாற்றாக (1-6-1958 முதல் செல்திறம் பெறுமாறு) அமைக்கப்பட்டது.

[2] அதாவது, 25-10-1949.

[3] கனிமச்சலுகை விதிகள், 1949-க்காக, 1949 இந்திய அரசிதழின் பகுதி I, பக்கம் 2075-ஐப் பார்க்கவும். கல்லெண்ணெய்ச் சலுகை விதிகள், 1949-க்காக மேற்படி அரசிதழின், சிறப்பிதழ், பக்கம் 2713 ஐப் பார்க்கவும்.

[1] சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (ஒழுங்குறுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) சட்டம், 1957 (67/1957) இன் பிரிவு 32 மற்றும் இணைப்புப்பட்டியல் III ஆல் "கனிமங்கள்" என்னும் சொல்லுக்கு மாற்றாக (1-6-1958 முதல் செல்திறம் பெறுமாறு) அமைக்கப்பட்டது.

(ஈ) சுரங்கப் பணி நடைபெற்றாலும், இல்லாவிட்டாலும், ஒரு குத்தகை எடுப்பவரால் செலுத்தப்படத்தக்க மேல்வரை மற்றும் கீழ்வரை குத்தகையை நிருணயித்தல்.

கனிம எண்ணெய்களின் மேம்பாடு பொறுத்து விதிகளை வகுக்க அதிகாரம்.

6. (1) மைய அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, [1][கனிம எண்ணெய்களை] [2][பேணிக் காப்பதற்கும் மேம்படுத்துவதற்கும்] விதிகளை வகுக்கலாம்.

(2) குறிப்பாகவும், மேலேகண்ட அதிகாரத்தின் பொதுப்பாங்கிற்குக் குந்தகமின்றியும், அத்தகைய விதிகள் பின்வரும் பொருட்பாடுகள் அனைத்திற்காகவும் அல்லது அவற்றில் எதற்காகவும் வகைசெய்யலாம்; அவையாவன:—

[3][* * *]

(இ) பொறிகள், இயந்திரங்கள் அல்லது பிற சாதனம் எவற்றையும் பயன்படுத்தும் முறையை வகுத்துரைத்தல் அல்லது ஒழுங்குறுத்துதல் வாயிலாகப் பரப்பிடம் எதிலும் [4][கனிம எண்ணெய் வளவாயில்கள்] எவற்றையும் மேம்படுத்துதல்;

(ஈ) எண்ணெய் வயலில் எண்ணெய்க் கிணறுகளைத் துரப்பணம் செய்தல், மறு துரப்பணம் செய்தல், ஆழப்படுத்துதல், மூடி விடுதல், அடைத்து விடுதல், கைவிட்டுவிடுதல் ஆகியவற்றை ஒழுங்குறுத்துதல் மற்றும் அத்தகைய செயல்முறைகளுக்கு வரம்பிடுதல் அல்லது அவற்றைத் தடை செய்தல், மற்றும் எண்ணெய் வீணாவதை அல்லது சேதமுறுவதைத் தடுப்பதற்குத் தீர்வழி நடவடிக்கைகளை எடுத்தல்;

(உ) எண்ணெய் வயல் எதிலும், எண்ணெய் உற்பத்தி செய்யும் முறைகளை ஒழுங்குறுத்துதல், மற்றும் அத்தகைய முறைகளுக்கு வரம்பிடுதல் அல்லது அவற்றைத் தடை செய்தல்;

(ஊ) புதிதாகத் துளையிடுதல், சுரங்க வாயிற்குழிகளைத் தோண்டுதல், அனைத்தையும் கட்டாயமாக அறிவிக்கை செய்தல், மற்றும் துளையிடல் பதிவணங்களையும், புதிய துளைத் துவாரங்கள் அனைத்தின் உள்ளீடுகளின் மாதிரிகளையும் பாதுகாப்பாக வைத்தல்;

(எ) சுரங்கங்களிலிருந்தும், புதிய துளைத் துவாரங்களிலிருந்தும் மாதிரிகளை எடுத்தல்;

(ஏ) [5][கனிம எண்ணெய்களை]ச் சேமித்து வைப்பதற்கான ஏற்பாடுகளை ஒழுங்குறுத்துதல் மற்றும் நபர் எவராலும் வைத்துவரப்படலாகும் அதன் கையிருப்புகள்;

[6][(ஐ) சுரங்கங்களிலிருந்து எடுக்கப்பட்ட, தோண்டி எடுக்கப்பட்ட, அகழ்ந்தெடுக்கப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட கனிம எண்ணெய்கள் பொறுத்து உரிமைத் தொகைகளைத் தண்டல் செய்தல், மற்றும் கட்டணங்களை அல்லது வரிகளை விதித்தலும், தண்டல் செய்தலும்;]

(ஒ) சுரங்கங்களின் உரிமையாளர்களால் அல்லது குத்தகை எடுப்பவர்களால் தனியுறு அல்லது காலமுறை விவர அறிக்கைகளும், அறிக்கைகளும் பணிந்தனுப்பப்படுதல், மற்றும், அத்தகைய விவர அறிக்கைகளும், அறிக்கைகளும் எந்தப் படிவங்களில், எந்த அதிகார அமைப்புகளுக்குப் பணிந்தனுப்பப்பட வேண்டும் என்பது.

---

1. சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள் (ஒழுங்குறுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) சட்டம், 1957 (67/1957) இன் பிரிவு 32 மற்றும் இணைப்புப்பட்டியல் IIIஆல் "கனிமங்கள்" என்ற சொல்லுக்கு மாற்றாக (1-6-1958) முதல் செல்திறம் பெறுமாறு அமைக்கப்பட்டது.

2. கனிமங்களைப் பேணிக் காத்தல் மற்றும் மேம்படுத்துதல் விதிகள், 1955-க்காக, 1955, இந்திய அரசிதழின் பகுதி II-பிரிவு 3, பக்கம் 343-ஐப் பார்க்கவும், கல்லெண்ணெய் மற்றும் இயற்கை எரிவாயு விதிகள், 1959-க்காக, 24-11-1959 தேதியிடப்பட்ட இந்திய அரசிதழின் சிறப்பிதழ் பகுதி II-பிரிவு 3(i), பக்கம் 773-ஐப் பார்க்கவும்.

3. மேற்படி சட்டத்தால் (அ) ,(ஆ) ஆகிய கூறுகள் விட்டுவிடப்பட்டன.

4. மேற்படி சட்டத்தால் "கனிமவளவாயில்கள்" என்பதற்கு மாற்றாக அமைக்கப்பட்டது.

5. மேற்படி சட்டத்தால் "கனிமங்கள்" என்பதற்கு மாற்றாக அமைக்கப்பட்டது.

6. எண்ணெய் வயல்கள் (ஒழுங்குறுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) திருத்தச் சட்டம், 1969 (39/1969) இன் பிரிவு 2 ஆல் முன்பிருந்த (ஐ) கூறுக்கு மாற்றாக (1-1-1968 முதல் முன்மேவு செல்திறம் பெறுமாறு) அமைக்கப்பட்டது.

[1][6 அ. (1) எண்ணெய் வயல்கள் (ஒழுங்குறுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) திருத்தச் சட்டம், 1969இன் தொடக்க நிலைக்கு முன்புவழங்கப்பட்ட ஒரு சுரங்கக் குத்தகையை வைத்திருப்பவர், அத்தகைய தொடக்க நிலையின்போது செல்லாற்றலிலிருந்த அத்தகைய முறையாவணத்தில் அல்லது சட்டம் எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், அத்தகைய தொடக்க நிலைக்குப் பின்பு குத்தகைக்கு விடப்பட்ட பரப்பிடத்திலிருந்து அவரால் சுரங்கத்திலிருந்து எடுக்கப்பட்ட, தோண்டி எடுக்கப்பட்ட, அகழ்வு செய்யப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட கனிம எண்ணெய் எதனையும் பொறுத்து அப்போதைக்குக் குறித்துரைக்கப்பட்டுள்ள வீதத்தில் உரிமைத் தொகை செலுத்துதல் வேண்டும். கனிம எண்ணெய்கள் பொறுத்த உரிமைத் தொகைகள்.

(2) எண்ணெய் வயல்கள் (ஒழுங்குறுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) திருத்தச் சட்டம், 1969இன் தொடக்க நிலையில் அல்லது அதன் பின்பு வழங்கப்பட்ட ஒரு சுரங்கக் குத்தகையை வைத்திருப்பவர், குத்தகைக்கு எடுக்கப்பட்ட பரப்பிடத்திலிருந்து அவரால் சுரங்கத்திலிருந்து எடுக்கப்பட்ட, தோண்டி எடுக்கப்பட்ட, அகழ்வு செய்யப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட கனிம எண்ணெய் எதனையும் பொறுத்து இணைப்புப்பட்டியலில் அந்தக் கனிம எண்ணெய் பொறுத்து அப்போதைக்குக் குறித்துரைக்கப்பட்டுள்ள வீதத்தில் உரிமைத் தொகை செலுத்துதல் வேண்டும்.

(3) உட்பிரிவு (1) இல் அல்லது உட்பிரிவு (2) இல் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும், தவிர்க்க முடியாத வகையில் இழந்துவிடப்படுகிற அல்லது சேமக்கலத்திற்குத் திருப்பியனுப்பப்படுகிற அல்லது கல்லெண்ணெய் அல்லது இயற்கை எரிவாயுவை அல்லது இரண்டையும் உற்பத்தி செய்தல் தொடர்பான துரப்பணத்திற்கு அல்லது பிற செயல்முறைகளுக்குப் பயன்படுத்தப்படுகிற, பக்குவப்படுத்தப்படாத எண்ணெய், எண்ணெய்-வாயுகலந்த உறைபொருள் அல்லது இயற்கை எரிவாயு எதனையும் பொறுத்து உரிமைத் தொகை எதுவும் செலுத்தப்படத் தக்கது ஆகாது.]

[2][(4) மைய அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, அந்த அறிவிக்கையில் குறித்துரைக்கப்படலாகும் தேதியிலிருந்து செல்திறம் பெறுமாறு, கனிம எண்ணெய் எதனையும் பொறுத்து செலுத்தப்படத்தக்க உரிமைத்தொகை வீதத்தை உயர்த்தவோ குறைக்கவோ செய்யும் வகையில் இணைப்புப்பட்டியலைத் திருத்தம் செய்யலாம், மற்றும் பல்வேறு வகைப்பட்ட சுரங்கக் குத்தகைகள் எடுக்கப்பட்ட பகுதியிலிருந்து எடுக்கப்பட்ட, தோண்டி எடுக்கப்பட்ட, அகழ்வு செய்யப்பட்ட அல்லது சேகரிக்கப்பட்ட கனிம எண்ணெய் எதனையும் பொறுத்து வெவ்வேறுபட்ட வீதங்கள் குறித்துரைக்கப்படுதல் வேண்டும்:

**வரம்புரையாக:** மைய அரசாங்கமானது, எண்ணெய் வயல்களில் அல்லது, நேர்வுக்கேற்ப, எண்ணெய் ஊற்றுத் தலைக்கண்ணிலுள்ள கனிம எண்ணெயின் விற்பனை விலையில் இருபது விழுக்காட்டிற்கு மேம்படுகிற வகையில், கனிம எண்ணெய் எதனையும் பொறுத்து, உரிமைத் தொகை வீதங்களை நிருணயித்தல் ஆகாது.

(5) மைய அரசாங்கம், கரையிலிருந்து விலகி உள்ள பகுதிகளில் ஆய்வு செய்யப்படுவதை ஊக்கப்படுத்தும் நோக்குடன், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, முழுவதுமாகவோ அல்லது அறிவிக்கையில் குறித்துரைக்கப்படலாகும் வரைக்கட்டுகளுக்கு உட்பட்டோ, அத்தகைய பகுதிகளிலிருந்து தயாரிக்கப்படும் கனிம எண்ணெய்க்கு, அதன் பேரில் விதிக்கத்தக்க உரிமைத் தொகையிலிருந்து முழுவதுமாக அல்லது பகுதி எதிலிருந்து பொதுவாக விலக்களிப்பது பொதுநலனுக்காகத் தேவைப்படுகிறது எனத் தெளிவுறக் காணுமாயின், அது அவ்வாறு செய்யலாம்.]

7. (1) இந்தச் சட்டத்தின் தொடக்கநிலைக்கு முன்பு வழங்கப்பட்ட ஏதேனும் சுரங்கக் குத்தகையின் வரையுரைகளையும், வரைக்கட்டுகளையும் 5, 6 ஆகிய பிரிவுகளின்படி வகுக்கப்பட்ட விதிகளுக்கு இணங்கச் செய்யும் வகையில், அத்தகைய குத்தகையை மாற்றமைவு செய்யும் அல்லது மாற்றம் செய்யும் நோக்கத்திற்காக மைய அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, விதிகளை வகுக்கலாம்: நிலவுறும் குத்தகைகளை மாற்றமைவு செய்வதற்கான விதிகளை வகுக்க அதிகாரம்.

---

[1] எண்ணெய் வயல்கள் (ஒழுங்குறுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) திருத்தச் சட்டம், 1969 (39/1969) இன் பிரிவு 3 ஆல் (1-1-1968 முதல் முன்மேவு செல்திறம் பெறுமாறு) புகுத்தப்பட்டது.

[2] எண்ணெய் வயல்கள் (ஒழுங்குறுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) திருத்தச் சட்டம், 1998 (சட்ட எண் 29/1998) இன்படி இந்த உட்பிரிவுகள், முன்பிருந்த உட்பிரிவுகள் (4) மற்றும் (5)-க்கு மாற்றாக அமைக்கப்பட்டன.

வரம்புரையாக: அவ்வாறு வகுக்கப்பட்ட எந்த விதிகள் உட்பிரிவு (2) இன் கூறு (இ)யில் குறிப்பிடப்பட்ட பொருட்பாடுகளுக்கு வகை செய்கின்றனவோ அந்த விதிகள் எவையும் அவற்றுக்கு மாற்றமைவுகளுடனோ, இல்லாமலோ [1][மக்களவையால்] ஒப்பேற்பளிக்கப்படும் வரையில், செல்லாற்றல் பெறுதல் ஆகாது.

(2) உட்பிரிவு (1) இன்படி வகுக்கப்படும் விதிகள்,—

(அ) அதன்படி செய்யக் கருதப்படும் மாற்றமைவு அல்லது மாற்றம் பற்றிய முன் அறிவிப்பைக் குத்தகை எடுப்பவருக்கும், குத்தகை விடுபவர் மைய அரசாங்கமாக இல்லாதிருக்கிறவிடத்து, குத்தகை விடுபவருக்கும் கூட கொடுப்பதற்கும், அந்தச் செயற்குறிப்புக்கு எதிராகக் காரணங் காட்டுவதற்கு அவர்களுக்கு ஒரு வாய்ப்பு அளிக்கப்படுவதற்கும்,

(ஆ) செய்யக் கருதப்பட்ட மாற்றமைவினால் அல்லது மாற்றத்தினால் பயன்பெறும் தரப்பினரால், நிலவுறும் குத்தகையின் கீழ், எந்தத் தரப்பினரின் உரிமைகள், கேடுறும் வகையில் பாதிக்கப்படுமோ அந்தத் தரப்பினருக்கு சரியீடு செலுத்தப்படுவதற்கும்,

(இ) மேற்சொன்ன சரியீடு எந்த நெறிமுறைகளின்பேரில் எந்த முறையில், எந்த அதிகார அமைப்பால் தீர்மானிக்கப்படுதல் வேண்டும் என்பதற்கும்,

வகை செய்தல் வேண்டும்.

8. மைய அரசாங்கம், அதிகாரமுறை அரசிதழில் அறிவிக்கை வாயிலாக, இந்தச் சட்டத்தின்படி செலுத்தப்படத்தக்க அதிகாரம் எதுவும், பணிப்புரையில் குறித்துரைக்கப்படலாகும் அலுவலரினால் அல்லது அதிகார அமைப்பினால், அதில் குறித்துரைக்கப்படலாகும் வரைக்கட்டுகள், எவையேனுமிருப்பின், அவற்றிற்கு உட்பட்டு, செலுத்தப்படுதல் வேண்டும் என்று பணிக்கலாம். ஒப்படைப்பு செய்தல்.

9. (1) இந்தச் சட்டத்தின் வகையங்களில் எதன்படியும் வகுக்கப்படும் விதி எதுவும், அதன் மீறுகை எதுவும், ஆறு மாதங்கள்வரை நீடிக்கலாகும் சிறைத் தண்டனையோ, ஓராயிரம் ரூபாய் வரை நீடிக்கலாகும் பணத் தண்டமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படத்தக்கது என்று வகை செய்யலாம். தண்டனைகள்.

(2) உட்பிரிவு (1)இல் சுட்டப்பட்ட குற்றச்செயல் எதற்காகவும் குற்றத்தீர்ப்பு வழங்கப்பட்ட பின்பு, அத்தகைய குற்றச்செயலைத் தொடர்ந்து செய்கிற எவராயினும், முதல் குற்றத்தீர்ப்பின் தேதிக்குப் பின்பு, அவர் அவ்வாறு தொடர்ந்து குற்றச்செயல் புரிகிறபோது ஒவ்வொரு நாளுக்கும், நூறு ரூபாய்வரை நீடிக்கலாகும் பணத் தண்டம் விதித்துத் தண்டிக்கப்படத்தக்கவர் ஆவார்.

[2][10. இந்தச் சட்டத்தின்படி வகுக்கப்படும் விதி ஒவ்வொன்றும், மற்றும் [3][பிரிவு 6 அ இன் உட்பிரிவு (4) இன் அல்லது உட்பிரிவு (5) இன்படி.] பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை ஒவ்வொன்றும், அது வகுக்கப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்பு, கூடிய விரைவில், நாடாளுமன்ற அவை ஒவ்வொன்றிலும், அது ஒரு கூட்டத் தொடராகவோ, இரண்டு அல்லது அவற்றிற்கு மேற்பட்ட அடுத்தடுத்தக் கூட்டத் தொடர்களாகவோ மொத்தம் முப்பது நாட்களைக் கொண்ட ஒரு கால அளவிற்கு அது அமர்வில் இருக்கையில், அதன் முன் வைக்கப்படுதல் வேண்டும். மேலும், மேற்சொன்ன கூட்டத்தொடரை அல்லது அடுத்தடுத்த கூட்டத்தொடர்களை உடனடியாகத் தொடர்ந்துவரும் கூட்டத்தொடர் முடிவடைவதற்கு முன்பு, அந்த விதியில் அல்லது அறிவிக்கையில் மாற்றமைவு எதனையும் செய்வதற்கு இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அல்லது விதிகளையும் அறிவிக்கைகளையும் முன்வைத்தல்.

---

1. சட்டங்கள் இணக்க ஆணை, 1950 ஆல் 'மையச் சட்டமன்றம்' என்னும் சொற்களுக்கு மாற்றாக அமைக்கப்பட்டன (26-1-1950).

2. எண்ணெய் வயல்கள் (ஒழுங்குறுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) திருத்தச் சட்டம், 1984 (சட்ட எண் 26/1984) இன் பிரிவு 3ஆல் மாற்றாக அமைக்கப்பட்டன. (11-5-1984).

3. எண்ணெய் வயல்கள் (ஒழுங்குறுத்துதல் மற்றும் மேம்படுத்துதல்) திருத்தச் சட்டம், 1998 (சட்ட எண் 29/1998) இன் பிரிவு 3 ஆல் முன்பிருந்த சொற்கள், அடைப்புக்குறிகள், இலக்கங்கள், மற்றும் எழுத்திற்கு மாற்றாக அமைக்கப்பட்டன.

அந்த விதி வகுக்கப்படுதல் ஆகாது அல்லது அந்த அறிவிக்கை பிறப்பிக்கப்படுதல் ஆகாது என்பதை இரண்டு அவைகளும் ஒத்துக்கொள்ளுமாயின், அதன்பின்பு, அந்த விதி அல்லது அறிவிக்கை மாற்றமைவு செய்யப்பட்ட வடிவத்தில் மட்டுமே செல்திறம் உடையது ஆகும் அல்லது, நேர்வுக்கேற்ப, செல்திறம் இல்லாதுபோகும். எனினும், அத்தகைய மாற்றமைவு அல்லது அழித்தறவு எதுவும், அந்த விதி அல்லது அறிவிக்கையின்படி முன்னதாகச் செய்யப்பட்ட எதனின் செல்லுந்தன்மைக்கும் குந்தகமின்றி இருத்தல் வேண்டும்.]

ஆய்வு செய்வதற்கு அதிகாரம்.

11. (1) ஏதேனும் சுரங்கத்தின் அல்லது கைவிடப்பட்ட சுரங்கத்தின் நடப்புக் கால அல்லது எதிர்காலப் பணி பற்றிய நிலையினைக் கண்டறியும் நோக்கத்திற்காக அல்லது இந்தச் சட்டத்தில் அல்லது அதன்படி வகுக்கப்படும் விதிகளில் குறிப்பிடப்பட்ட பிற நோக்கம் எதற்காகவும், இதற்கென மைய அரசாங்கத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் எவரும்,—

(அ) சுரங்கம் எதிலும் நுழைந்து, ஆய்வு செய்வதற்கும்,

(ஆ) ஏதேனும் சுரங்கத்தின் கட்டாளுகையைக் கொண்டிருக்கிற அல்லது அதனுடன் தொடர்புடைய எவரேனும் ஒருவரின் கையுடைமையில் அல்லது அதிகாரத்தில் உள்ள ஆவணம், புத்தகம், பதிவேடு அல்லது பதிவணம் எதனையும் முன்னிலைப்படுத்துமாறு ஆணையிடுவதற்கும்,

(இ) ஏதேனும் சுரங்கத்தின் கட்டாளுகையைக் கொண்டிருக்கிற அல்லது அதனுடன் தொடர்புடைய எவரையும் விசாரணை செய்வதற்கும்,

உரிமையுடையவர் ஆவார்.

(2) உட்பிரிவு (1) இன்படி மைய அரசாங்கத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் எவரும், இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் பிரிவு 21இன் பொருளின்படி ஒரு பொதுப் பணியாளராகக் கருதப்படுவார்.

தனியுறு நேர்வுகளில் விதிகளைத் தளர்த்துதல்.

12. பிரிவுகள் 5,6 ஆகியவற்றின்படி வகுக்கப்படும் விதிகளில் விதிக்கப்பட்டுள்ளவற்றிலிருந்து வேறுபட்ட வரையுரைகள் மற்றும் வரைக்கட்டுகளின்பேரில், சுரங்கக் குத்தகை எதனையும் வழங்குவதற்கு அல்லது சுரங்கம் எதுவும் செயற்படுவதற்கு, எந்த நேர்விலும் அதிகாரமளிப்பது பொதுநலனுக்கு உகந்தது என மைய அரசாங்கம் தெளிவுறக் காணுமாயின், அது அவ்வாறே செய்யலாம்.

இந்தச் சட்டம் அரசாங்கத்தைக் கட்டுப் படுத்துவது ஆகும்.

[1][13. இந்தச் சட்டத்தின் வகையங்கள், அரசாங்கத்தைக் கட்டுப்படுத்துவன ஆகும்.]

நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.

14. இந்தச் சட்டத்தின்படி நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட எதற்காகவும், நபர் எவருக்கும் எதிராக உரிமை வழக்கு, குற்றவழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கை எதுவும் தொடரப்படுதல் ஆகாது.

---

[1] சட்டங்கள் இணைக்க ஆணை, 1950ஆல் முன்பிருந்த பிரிவு 13-க்கு மாற்றாக அமைக்கப்பட்டது (26-1-1950).

## [1][இணைப்புப்பட்டியல்

(பிரிவு 6(அ) வைப் பார்க்கவும்.)

### உரிமைத்தொகை விதங்கள்

| | |
|---|---|
| [2][1. பக்குவப்படுத்தப்படாத எண்ணெய் | 1990 ஏப்ரல் 1 அன்று தொடங்கி, 1993 மார்ச் 31 அன்று முடிவடைகிற கால அளவிற்கு மெட்ரிக் டன் ஒன்றுக்கு நானூற்று எண்பத்தொரு ரூபாய்.] |
| [3][2. எண்ணெய்-எரிவாயு கலந்த செறிபொருள் | |
| 3. இயற்கை எரிவாயு | ஊற்றுத் தலைக்கண்ணில் பெறப்பட்ட இயற்கை எரிவாயுவின் மதிப்பில் பத்து விழுக்காடு.] |

---

1. 39/1969 சட்டத்தின் பிரிவு 4ஆல் (1-1-1968 முதல் முன்மேவு செல்திறம் பெறுமாறு) புகுத்தப்பட்டது.

2. 91(உ)/1993 எண்ணுள்ள நிலையாணையினால் மாற்றாக அமைக்கப்பட்டது. 6-2-1993 இந்திய அரசிதழின் சிறப்பிதழ், பகுதி II, பிரிவு 3(ii), பக்கம் 2 (எண் 81).

3. 666(உ)/1994 எண்ணுள்ள நிலையாணையினால் மாற்றாக அமைக்கப்பட்டது. 12-9-1994 இந்திய அரசிதழின் சிறப்பிதழ், பகுதி II, பிரிவு 3(ii), பக்கம் 2 (எண் 457).